1974 ஆகஸ்ட் 12]

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. மழை காலம் நெருங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு பக்கத்திலுள்ள மக்கள் மறு பக்கத்திற்குப் போவதற்கு உதவிகரமாக இருக்கும் வகையில், அந்தப் பாலத்தை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த ஆண்டு வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்காரர்களிடம் வேலையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு.

*12 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் தற்போது எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சேலம் உருக்காலையை அமைக்கும் கம்பெனியான "சேலம் ஸ்டீல் லிமிடெட்" என்னும் நிறுவனத்தில் தற்போது 100 பேர் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளார்கள் என்றும், "ஹிந்துஸ்தான் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட்" என்னும் நிறுவனத்தின் கீழ் சுமார் 6,592 பேர் வேலை செய்வதாகத் தகவல் வந்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சேலம் உருக்காலைத் திட்டம் எப்போது வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. முடிகின்ற நேரத்தில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்பிருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வருங்காலத்தில் முதல் பகுதியாக (பேஸ்-ஒன்) 1,561 பேர்களுக்கு வேலை கிடைக்கலாம் என்று தகவல் தந்து இருக்கிறார்கள். முடிப்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இதிலும் வேலைக்கு அமர்த்துவதில் 80 சதவிகிதம் அந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக, இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 12

உள்ளவர்களுகருத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தபபடடிருக்கிறதா? அப்படியானால், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதிலும் வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது. நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே எடுத்துக்காட்டியது போல், மற்ற மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் கொள்கைப்படி, நம்முடைய அரசின் அலுவலர் ஒருவரை அவர்கள் ஏற்றுக்கொண்டு, வேலைவாய்ப்புப் பணிகளைத் தமிழ் நாட்டைச் சேர்ந்த மக்களுக்கு, அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, அமைச்சர் பதிலில் இருந்து சில 'கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகள்' தான் ஆட்களை வைத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக வேலைக்கு இருக்கும் ஆட்களைப் பற்றிய தகவல் இல்லை. ஆகவே, அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், இந்தக் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகள் எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், அமைச்சர் சொல்லும் கணக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே, 100 என்று சொன்னேன்.

கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்த கடன்கள்

*13 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தக் கடன் உதவி அளிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?